செ.வெ.எண்:80 நாள்:30.09.2017

**தூய்மை பாரத இயக்க 4 வது ஆண்டு விழா மற்றும் "தூய்மையே சேவை", நிகழ்வுகளுக்கு பரிசளிப்பு வழங்கும் விழா விழா மற்றும் "தூய்மையே சேவையின்" நிழச்சியின் நிறைவு விழா நிகழ்ச்சிகள் 02.10.2017 காலை 08.00 மணிக்கு பாளையங்கோட்டை, வ.உ.சி மைதானத்தில் நடைபெறவுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

-----------

மாண்புமிகு பாரதப்பிரதம மந்திரி அவர்களால் தூய்மை பாரத இயக்கம் 2.10.2014ல் துவக்கப்பட்டது அதன்படி திருநெல்வேலி மாவட்டத்தினை திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத மாவட்டமாக 31.10.2017-க்குள் அறிவித்திட மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தூய்மை பாரத இயக்கத்தின் ஒரு பகுதியாக 15.09.2017 முதல் 02.10.2017 வரை அரசு கட்டிடங்கள், பொது இடங்கள், சுற்றுலத் ஸ்தலங்கள், பிரசித்த பெற்ற கோவில்கள் மற்றும் நீர்நிலைகளை சுத்தப்படுத்தும் பணிகள் "தூய்மையே சேவை" என கொண்டாடப்பட்டது. மேலும். திந்தவெளியில் மலம் கழித்தல் நிலைக்கு எதிராக செய்ய வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கட்டுரைப்போட்டிகள் மற்றும் குறுப்படப்போட்டிகள் நடத்தப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் தூய்மையே சேவை சிறப்பு நிகழ்வாக 23.09.2017 அன்று 15,000 மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்ட தாமிரபரணி நதியினை் தூய்மைப்படுத்தும் பணி நடைபெற்றது.

தூய்மை பாரத இயக்கத்தின் நான்கவது ஆண்டு விழா மற்றும் "தூய்மையே சேவையின்" நிழச்சியின் நிறைவு விழா நிகழ்ச்சிகள் 02.10.2017 காலை 08.00 மணிக்கு பாளையங்கோட்டை, வ.உ.சி மைதானத்தில் வைத்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் தாமிரபரணி ஆற்றினை தூய்மைப்படுத்திய நிகழ்வுகளில் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளின் பங்கேற்க செய்த நிர்வாகம் மற்றும் தன்னார்வ தொண்டு அமைப்புகளை கொளரவிக்கம் விதமாகவும், பள்ளி மாண்வர்கள் மற்றம் பொதுமக்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்சியில் சிறப்பு அம்சமாக 2.10.2017 தேசப்பிதா மகாத்மா காந்தி பிறந்தநளை முன்னிட்டு 1000 பள்ளி மாணவ மாணவிகளை கொண்ட பிரம்மாண்டமான சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாளையங்கோட்டை வ.உ.சி மைதனாத்தில் நடைபெறும் முப்பெரும் விழாயில் பொதுமக்கள் பள்ளி மாணவ, மாணவிகள் அனைவரும் கலந்து கொண்டு

சிறப்பித்திட மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்திமக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.**